மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியில் இப்படிப்பட்ட கோரிக்கை வெளியிடப்பட்டபொழுது, அது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்றுதான் தலைமைச் செயலாளர் குறிப்பிட்டிருப்பதாக நான் அறிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த இரகசியக் குறிப்பு எழுதுவதன் மூலமாகச் சில தவறான நடவடிக்கைகளுக்கு, பெரிய அதிகாரிகளுக்கு உடந்தையாக இல்லை என்பதற்காக, எவ்வளவு நேர்மையானவராக இருந்தாலும்கூட இரகசியக் குறிப்பு எழுதுவதன் மூலமாகப் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, நமது அரசு கட்டாயமாக, அவர்களைப் பாதிக்காத முறையில் அதை எடுத்துவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படித் தவறாக இருந்தால் மேல் அதிகாரிக்களுக்கு அப்பீல் செய்து கொள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமை இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

Safety of Tamil population in Bombay.

*** 492 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : THIRU M. P. SARATHI : Will the Hon. the Chief Minister be pleased to state whether he has written to the Chief Minister of Maharashtra about the safety of Tamil population in Bombay, about the 17th February 1969 ?**

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : ஆம்.

திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் : சபாநாயகர வர்களே, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சொத்துக்கள் எவ்வளவு நஷ்டமாகிவிட்டன ? அதைத் திருப்பிக் கொடுப்பதற்கு மகாராஷ்டிர அரசாங்கத்திற்குத் தகவல் அளிக்கப்பட்டதா ? அவர்களின் பாதுகாப்பிற்கு மேலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மராட்டியத்தில் இந்த சிவசேனை ரகளைகளின் காரணமாக மொத்தமாக ஏற்பட்ட விரயம் 4 முதல் 5 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இதிலே தனிப்பட்ட முறையிலே தமிழர்கள் இல்லங்கள், அவர்களுடைய உடமைகளுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டது என்பதற்கான விவரம் எதுவுமில்லை. அதற்கு நஷ்டஈடு தரும் முறையில் மகாராஷ்டிர அரசாங்கம் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தமிழர்கள் பம்பாயிலிருந்தும், இலங்கையிலிருந்தும் விரட்டியடிக்கப்பட்டது போலவே இன்று மராட்டியத்திலிருந்தும், மற்ற வடமாநிலங்களிலிருந்தும் விரட்டியடிக்கப்படுகிறார்கள். இந்திய ஒருமைப்பாடு என்னும் பெயரால் "ஜன கண மண" பாடுவதற்கு மட்டும் தானா தமிழர்கள் இருக்கிறார்கள். தமிழர்கள் இனி தமிழ்நாட்டில் மட்டும்தான் வாழ முடியும் என்ற நிலை உருவாவது அரசுக்குத் தெறியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் மராட்டிய முதல்வருக்கு எழுதிய கடிதத்திற்கு அவர் பதில் எழுதும்போது, தற்பொழுது முற்றிலும் இயல்பான நிலை நீடிக்கிறது என்றும், அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்க காவலர் தங்களால் இயன்றதை எல்லாம் செய்து வருகின்றனர் என்றும் மராட்டிய முதலமைச்சர் பதில் அளித்திருக்கிறார். ஆகவே, தமிழர்களுக்கு இனி அங்கு தொடர்ந்து பாதுகாப்பு அளிக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : இந்த சிவசேனைக்காரர்கள், தமிழர்கள், கன்னடியர்கள், மலையாளிகள் இந்த மூன்று இனத்தார்களையும் சேர்த்துத் தாக்குகிறார்களா ? அல்லது தனிப்பட்ட, தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களை மட்டும்தானா தாக்குகிறார்கள் ? அப்படி மூன்று இனத்தார்களையும் சேர்த்து என்றால், இந்த மூன்று நாட்டைச் சேர்ந்த முதலமைச்சர்களும் சேர்ந்து யோசனை செய்து ஏதாவது ஒரு தீவிர நடவடிக்கை எடுக்க முன் வர முடியுமா என்பதற்கு நமது முதலமைச்சரவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதில் தென்னாட்டைச் சேர்ந்த அனைவரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். மராட்டிய முதல்வர் எழுதிய கடிதத்தில், தென்னிந்தியர்களுக்குச் சொந்தமாக அல்லாத சில கடைகளும் இந்தக் கலவரத்தில் அழிக்கப்பட்டன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குறி வைத்து தென்னாட்டவர்களைத் தாக்கியிருக்கிறார்கள் என்றுதான் நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, மராட்டியத்திலே ஏற்பட்ட இந்த நிகழ்ச்சிகளுக்கான பின் விளைவுகள் இதற்கான அடிப்படைக் காரணங்கள் இவைகளையெல்லாம் நல்ல முறையிலே அறிந்து வருவதற்கு இந்த அரசு, அரசின் சார்பிலே ஒரு குழுவை அனுப்பிவைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கெனவே, நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி, எம். பி. அவர்களும், திரு. உமாநாத், எம். பி. அவர்களும் இங்கிருந்து அனுப்பப்பட்டார்கள். சென்றவர்களும் தாக்கப்பட்டு திரும்பினார்கள்.

Protective face nets for policemen.

*** 531 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—**

(*a*) whether the Government proposes to provide steel protective net for face for the policemen ; and

(*b*) if, so, how much would that steel-helmeted protective net cost ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : அமைச்சரவர்கள் இந்தக் கேள்விக்கு, இல்லை என்று பதில் சொல்லுகிறார்கள். நானே பார்த்தேன், அண்ணா சவ அடக்கம் செய்யக் கொண்டுவரும்பொழுது, நம்முடைய போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் இந்த protective steel-helmets வைத்துக் கொண்டு, கல் எறிபவர்களிடமிருந்து அவர்கள் மேல் விழாமல் பார்த்துக்கொள்ள வைத்திருந்ததை நானே பார்த்தேன். இது இல்லை என்று சொன்னால் எது பொருத்தம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைத் தாங்கள் புரிந்துகொள்ளாமல் பேசுகிறீர்கள் என்பதுதான் பொருத்தம். ஏனென்றால், கேட்டிருக்கும் கேள்வியில், "காவலர்கள் முகத்தில் அணிந்துகொள்ள உருக்காலான பாதுகாப்பு வலை கொடுக்க அரசு கருதியுள்ளதா ?" என்று கேட்டிருக்கிறீர்கள். அப்படியென்றால், உருக்குத் தொப்பியுடன் கூடிய அந்தப் பாதுகாப்பு வலைக்கு ஆகும் செலவு எவ்வளவு என்று கேட்டிருக்கிறார்கள். முகத்திலே அணிந்து கொள்ள உருக்காலான பாதுகாப்பு வலை கொடுக்கப்படுவதற்கு உத்தேசம் இல்லை என்று சொன்னேன். அதைப் புரிந்து கொள்ளாமல் மாண்புமிகு திரு. விநாயகம் அவர்கள் பேசுவது சரியல்ல.